**மக்கள் வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மக்கள் வங்கியினதும் (“வங்கி”) வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (“தொகுதி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னாள் நிதி அமைச்சரின் கட்டளையொன்றின் மூலம் குறித்த நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது.

வங்கி மற்றும் தொகுதியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு வங்கி மற்றும் தொகுதியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி மற்றும் தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கி மற்றும் தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ங்கி மற்றும் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கி மற்றும் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கி மற்றும் தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கி மற்றும் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1. பெறவேண்டியவை

#### 1.5.1.1. தொங்கள் கணக்கு நிலுவையாக உள்ள வினியோகம் தொடர்பான கொடுப்பனவு (பேரேட்டு இலக்கம் – 393470)

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தகவல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பெறுவதற்கு வழங்குநர்களுக்கு அளிக்கப்படும் முன்பணங்கள் மேலே உள்ள கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் பணம் செலுத்தப்பட்டதும், பெறப்பட்ட சேவையின் தன்மையைப் பொறுத்து அது மூலதனமாக்கப்படும். 31 டிசம்பர் 2022 இல் மேற்கூறிய கணக்கில் ரூபா.1,185,766,976 நிலுவைத் தொகை காட்டப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன. | தொங்கள் கணக்கு நிலுவையாக உள்ள வினியோகம் தொடர்பான கொடுப்பனவு தொகை (பேரேட்டு இலக்கம் - 393470) வழங்குநர்களுக்குச் செலுத்தப்பட்ட முன்பணத்தை உள்ளடக்கியது. திட்டப்பணிகள் முடிவடைந்தவுடன் நிலுவைத் தொகையை செலுத்தும்போது மட்டுமே கொடுப்பனவுத் தொகையை மூலதனமாக்க முடியும். அதுவரை இந்தக் கணக்கில் கொடுப்பனவுத தொகைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது நிலுவைத் தொகைகளை துல்லியமாக அறிந்திருத்தல், வகைப்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றை உறுதிசெய்து, நீண்ட கால நிலுவைத் தொகைகளை தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. |
| (i) ரூபா.813,556,548 தொகையான குறிப்பிடதக்க நிலுவைகளை அகற்ற நடவடிக்கை எடுக்காமல் ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன. | நிலுவையில் உள்ள வினியோகம் தொடர்பான கொடுப்பனவு தொங்கள் கணக்கு தொகை திட்டம் முடிந்ததும் தீர்ப்பனவு செய்யப்படும். | மேலும், இந்த உருப்படிகளில் பெரும்பாலானவை மென்பொருள் கொள்முதல் தொடர்பானவை என்பதால், திட்டத்தை முடிப்பதற்கு எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க கால தாமதத்துடன் இவை பயனுள்ளதாக இருக்காது. |
| (ii) மேற்கூறியபடி, வழங்குநர்களுக்குச் செலுத்தப்பட்ட முன்பணங்கள் மேற்கண்ட கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தரவு களஞ்சிய திட்டம் மற்றும் Application தரவு மீள் பதிவு திட்டத்தின் கீழ் ஐடி உபகரணங்களை வாங்குவதற்காக இரண்டு வழங்குநர்களுக்கு (ஜஸ்ட் இன் டைம் மற்றும் இனோவா ஐடி சிஸ்டம்ஸ்) ரூபா.184,220,563 முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையானது மேலே உள்ள கணக்கின் நிலுவையில் உள்ளது. எவ்வாறாயினும், சொத்துக்கள் இல்லாத காரணத்தினால் முழுத் தொகைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போதைய நிலை பின்வருமாறு.<br>Application தரவு மீள் பதிவு திட்டம் - ரூபா.49.8 மில்லியன். - 31 அக்டோபர் 2023 இல் பயனர் துறைகளின் இலக்குடன் பணம் செலுத்துதல் முடிவடைகிறது. மீதமுள்ள தொகையை தள்ளுபடி செய்ய நிதித்துறையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது<br><br>DWH திட்டம்- நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், DWH திட்டம் நிறுத்தப்பட்டது. அதன்படி, ரூபா.137,187,229.88 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (iii) வழங்கல் பிரிவு வழங்கிய அட்டவணையின்படி, ரூபா.84,631,716 நீண்ட காலமாக | 18 ஏப்ரல் 2023 மற்றும் 17 ஆகஸ்ட் 2023 ஆகிய திகதிகளில் JIT டெக்னாலஜிஸுக்கு ஆவண ஆதாரங்களைக் கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | |

| | | |
|---|---|---|
| நிலுவையில் இருந்ததால், இது தொடர்பான விவரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், கிடைக்கக்கூடிய சான்றுகளின்படி, 2018 ஆம் ஆண்டில் JIT டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு வங்கி ரூபா.84,631,716 செலுத்தியுள்ளது, இது எந்த ஆவண ஆதாரங்களாலும் நிரூபிக்கப்படவில்லை. மேலும், இது வங்கியின் டிஜிட்டல் வங்கித் திட்டத்திற்கான ஒப்பந்தத்தின் கீழ் உள்ளடக்கப்படாத மேலதிக கட்டணமாகும் என்பதும் தெரியவந்தது. | இருப்பினும், JIT யிடம் இருந்து இன்றுவரை எந்தவொரு பதிலும் வரவில்லை. | |

### 1.5.2 முற்பணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1.5.2.1 | 2022 ஆம் ஆண்டில் வங்கியால் ரூபா.484,180.94 மில்லியன் பெறுமதியான 114,310 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் அதில் ரூபா.5,953.74 மில்லியன் எண்ணிக்கையிலான 2380 கடன்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டுள்ளன. NPL வகைக்கு மாற்றப்பட்ட மேற்கூறிய கடன்களில், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் ரூபா.1,997.51 மில்லியன் தொகை பெறுமதியான 450 கடன்களில் இருந்து ஒரு தவணையை கூட வங்கியால் வசூலிக்க முடியவில்லை. | 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் ரூபா. 484,180.94 மில்லியனாகவும், 2022 ஆம் ஆண்டில் மேற்படி முற்பணங்களின் மீதமுள்ள மூலதனம் ரூபா.466,267 மில்லியனாகவும் இருந்தது. அதன்படி, NP வகைக்கு மாறிய சதவீதம் 1.2% ஆகும் (அதாவது, வழங்கப்பட்ட ரூபா.484,180.94 மில்லியன் கடன்களில் ரூபா.5,953.74 மில்லியன்), இது நாட்டின் பேரின-பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளத்தக்கது. ரூபா.5,953.74 மில்லியன் மதிப்பிலான 2380 செயல்படாத கடன்களில், 450 கணக்குகளின் மூலதனத் தொகையான ரூபா.1,997.51 மில்லியன் மற்றும் 31.12.2022 இல் வட்டி நிலுவை (Interest in suspense) ரூபா. 216.44 மில்லியன். மேலும், 31.12.2022 இன் வட்டி சஸ்பென்ஸின் மொத்த மதிப்பு கிட்டத்தட்ட ரூபா. 66,667.60 மில்லியனாக இருந்தது, இதில் 65% முதல் 25 NPL களுக்கான திரண்ட வட்டி ரூபா.43,447.37 மில்லியன் ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க தகுதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முன்பணங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மற்றும் வெற்றிகரமாக மற்றும் வினைத்திறனாக மீட்கவும். மேலும், இணங்காததற்கு பொறுப்பான தரப்பினருக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மற்றும் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும். |
| 1.5.2.2 | ரூபா.276.67 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா.365.45 மில்லியன் வட்டியை உள்ளடக்கிய ரூபா.642.12 மில்லியன் மொத்தக் கடன்கள் 2022 ஆம் ஆண்டு வங்கியால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில் ரூபா.15.35 மில்லியன் தள்ளுபடி செய்யப்பட்ட நிலுவைகளில் இருந்து மீட்கப்பட்டது. கடந்த | கணக்குப் புத்தகங்களைச் சரியாகப் பிரதிபலிக்கும் நோக்கத்திற்காக, ஒவ்வொரு ஆண்டும் பொருந்தக்கூடிய, திரும்பப் பெற முடியாத NP கடன்களுக்கான | |

ஐந்தாண்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்ட நிலுவைகள் மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட மீட்டெடுப்புகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ரூபா. மில்லியன்

| ஆண்டு | மூலதனம் | வட்டி | மொத்தம் | தள்ளுபடி செய்யப்பட்ட மீட்டெடுப்புகள் |
|---|---|---|---|---|
| 2018 | 254.86 | 641.05 | 895.91 | 25.96 |
| 2019 | 329.29 | 74.00 | 403.29 | 71.53 |
| 2020 | 363.20 | 1,321.12 | 1,684.32 | 13.57 |
| 2021 | 108.86 | 761.26 | 870.12 | 15.29 |
| 2022 | 276.67 | 365.45 | 642.12 | 15.35 |

தள்ளுபடிக் கொள்கையை வங்கி ஏற்றுக்கொண்டது. அத்தகைய தள்ளுபடி முன்பணத்தை மீட்டெடுப்பதற்கு சாத்தியமான அனைத்து மீட்பு நடவடிக்கைகளும் தொடரப்பட்டுள்ளன.

மேலும், தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களை மீட்டெடுப்பது மீட்புத் துறையின் முக்கிய செயல்திறன் குறிகாட்டியாக அமைக்கப்பட்டுள்ளது மற்றும் மீட்பு செயல்முறையின் செயல்திறனை உறுதி செய்வதற்காக, மாதாந்திர அடிப்படையில் நெருக்கமாக கண்காணிக்கப்படுகிறது. 31 டிசம்பர் 2022 நிலவரப்படி, தள்ளுபடி செய்யப்பட்ட மூலதனம் ரூபா.276.67 மில்லியன். மேலும், மீட்கப்பட்ட YTD ரூபா.15.35 மில்லியன் மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட தொகைக்கு எதிராக மீட்டெடுக்கப்பட்ட தொகையின் சதவீதம் 5.5 சதவீதம் ஆகும். மேலதிகமாக, 2022 ஆம் ஆண்டில் வங்கி வட்டியை தள்ளுபடி செய்யவில்லை என்பதையும், 2022 ஆம் ஆண்டில் 1வது கடனாளியின் தள்ளுபடி மதிப்பு ரூபா.229.89 மில்லியன் 03 வசதிகளை உள்ளடக்கியது என்பதையும் வலியுறுத்துகிறது.

1.5.2.3 31 டிசம்பர் 2022 இல் நிலை 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன்கள் முந்தைய ஆண்டுடண் ஒப்பிடும் போது ரூபா.179,443 மில்லியனிலிருந்து ரூபா.332,794 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், நிலை 2 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன்கள் முந்தைய ஆண்டில் ரூபா.207,799 மில்லியனிலிருந்து ரூபா.276,877 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் (ரூபா. 57.5 பில்லியன்), இலங்கை உரக் கம்பனி (ரூபா.24.1 பில்லியன்), மற்றும் கொழும்பு வர்த்தக உரம் (ரூபா. 15.1 பில்லியன்) ஆகியவை முக்கியமாக 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 3 ஆம் நிலைக்கு மாற்றப்பட்டன, இது தனிப்பட்ட நட்டக்கடன் ஏற்பாட்டின் கீழ் புறநிலை சான்றுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. 31 டிசம்பர் 2022 நிலவரப்படி இறையாண்மை தரமிறக்கலின் படி (post sovereign downgrade) டி.எஸ்.டி நிலை 1 இல் இருந்து நிலை 2 க்கு நகர்வதே நிலை 2 இன் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும்.

1.5.2.4 31 டிசம்பர் 2022 இன் படி வங்கியின் ரூபா.5 மில்லியனுக்கும் மேலான மொத்தச் செயல்படாத மேலதிகப் பற்று (OD) ரூபா.7,552.87 மில்லியன் ஆனது மூலதனம் ரூபா.2,168.83 மில்லியன் மற்றும் வட்டி ரூபா. 5,384.04 மில்லியனை உள்ளடக்கியது.

31 ஆகஸ்ட் 2023 நிலவரப்படி வங்கியின் ரூபா.5 மில்லியனுக்கும் மேலான மொத்தச் செயல்படாத மேலதிகப் பற்று (OD) மூலதன நிலுவை, ரூபா.684.60 மில்லியன் மற்றும் 18 எண்ணிக்கையிலான

1.5.2.5 31 டிசம்பர் 2022 இல் முதல் 10 செயல்படாத கடன்களின் (NPL கள்) மொத்த நிலுவைத் தொகை ரூபா.71,439.41 மில்லியனாக இருந்தது, மூலதனம் ரூபா.40,520.61 மில்லியன் மற்றும் வட்டி ரூபா.30,918.80 மில்லியன். விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கணக்குகளால் அதிகரித்துள்ளது. இந்த பாதகமான விளைவை நாங்கள் ஏற்கனவே கண்டறிந்து, தினசரி அடிப்படையில் நெருக்கமாகக் கண்காணித்து, ஒவ்வொரு மாத இறுதியிலும் மதிப்பாய்வு செய்துள்ளோம்.

கடன்களை மீட்பதற்காக எடுக்கப்பட்ட அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளின் காரணமாக NP கடன்களின் மூலதன நிலை குறைந்துள்ளது.
31.12.2022 நிலுவையில் உள்ள மூலதனம் - ரூபா.40,520.61 மில்லியன்
31.08.2023 நிலுவையில் உள்ள மூலதனம் - ரூபா.37,413.03 மில்லியன்.

அதன்படி 8% (ரூபா.3,107.58 மில்லியன்) குறைப்பு எட்டப்பட்டுள்ளது.

| | வாடிக்கையாளரின் பெயர் | மூலதன நிலுவை ரூபா. மில்லியன் | வட்டி நிலுவை ரூபா. மில்லியன் | மொத்த நிலுவை ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|
| 1 | லாப்ஸ் கேஸ் PLC | 835.76 | 142.84 | 978.59 |
| | லாப்ஸ் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் | 123.31 | 15.55 | 138.86 |
| | லாப்ஸ் டெர்மினல்ஸ் லிமிடெட் | 8,461.04 | 1,154.56 | 9,615.60 |
| | | **9,420.11** | **1,312.94** | **10,733.05** |
| 2 | ஸ்ரீ எக்யூப்மென்ட் பைனான்ஸ் லிமிடெட் | **5,493.75** | **499.81** | **5,993.56** |
| 3 | W.M.மென்டிஸ் & கம்பனி லிமிடெட் | **3,869.20** | **507.67** | **4,376.87** |
| 4 | கிராண்ட் மவுண்டன் ஹோட்டல் (பிரைவேட்) லிமிடெட் | 1,467.23 | 272.12 | 1,739.35 |
| | லக் ஸ்டீல் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் | 1,813.88 | 283.32 | 2,097.20 |
| | லக் ஜிப்சம் பிரைவேட் லிமிடெட் | 168.79 | 23.49 | 192.28 |
| | லக் பிராண்ட் மரச்சாமான்கள் | 59.12 | 8.40 | 67.52 |
| | | **3,509.02** | **587.33** | **4,096.35** |
| 5 | ஹரவீ இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிட்டெட் | **3,479.38** | **1,497.87** | **4,977.24** |
| 6 | மிஹின் லங்கா பிரைவேட் லிமிடெட் | **3,391.48** | **439.07** | **3,830.54** |
| 7 | CML MDT கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட் | 2,672.64 | 1,865.75 | 4,538.39 |
| | வாக்கர்ஸ் பைலிங் (பிரைவேட்) லிமிடெட் | 343.45 | 259.83 | 603.28 |
| | வாக்கர்ஸ் இக்யூப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் | 293.16 | 208.78 | 501.94 |
| | வாக்கர்ஸ் சன்ஸ் மற்றும் கோ-இன்ஜினியர்ஸ்(பிரைவேட்) லிமிடெட் | 25.55 | 49.51 | 75.06 |
| | எம்டிடி வாக்கர்ஸ் பிஎல்சி | 2.13 | 2.47 | 4.60 |
| | | **3,336.93** | **2,386.35** | **5,723.27** |
| 8 | யசோதா ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | 2,424.32 | 18,021.82 | 20,446.14 |
| | யசோதா மார்க்கெட்டிங் சர்வீசஸ் | 0.73 | 5.32 | 6.06 |

| | | | | |
|---|---|---|---|---|
| | (பிரைவேட்) லிமிடெட் | | | |
| | யசோதா அட்வர்டைசிங் (பிரைவேட்) லிமிடெட் | 0.47 | 3.44 | 3.91 |
| | யுனி ஏஜென்சீஸ் டிரான்ஸ்போர்ட் (பிரைவேட்) லிமிடெட் | 0.84 | 6.18 | 7.02 |
| | ருஹுனு அக்ரோ பேர்டிலைசர் கோ. லிமிடெட் | 498.50 | 3,769.72 | 4,268.22 |
| | ருஹுனு ப்ளைவுட் | 90.25 | 586.73 | 676.98 |
| | யூனி பிரிண்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | 11.02 | 91.77 | 102.79 |
| | முர்னி பேக்கரி உபகரணங்கள் | 4.30 | 27.04 | 31.34 |
| | யசோதா ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | **3,030.44** | **22,512.02** | **25,542.46** |
| 9 | நவலோகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிடெட் | 524.75 | 162.62 | 687.38 |
| | நவலோகா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் | 2,226.12 | 539.91 | 2,766.04 |
| | ஈஸ்ட் வெஸ்ட் மார்க்கெட்டிங் (பிரைவேட்) லிமிடெட் | 138.50 | 22.96 | 161.46 |
| | புதிய ஆஷ்ஃபோர்ட் இன்டர்நேஷனல் | 33.18 | 6.92 | 40.11 |
| | | **2,922.56** | **732.42** | **3,654.98** |
| 10 | கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் | **2,067.74** | **443.35** | **2,511.09** |
| | | **40,520.60** | **30,918.80** | **71,439.41** |

| | |
|---|---|
| 1.5.2.6 அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் மொத்த வெளிப்பாடு (SOEs) | கருத்து குறிப்பிடப்பட்டது. |
| (i) 31 டிசம்பர் 2022 நிலுவையில் உள்ள வங்கியின் மொத்த கடன்கள் மற்றும் முன்பணத் இலாகாவில் SOEs களுக்குச் சொந்தமான மொத்த நிலுவைத் தொகைகள் ரூபா.871,619 மில்லியன் அல்லது 45.5 சதவீதம் என பதிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், SOEs களின் நிலுவைத் தொகைகள் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.65,767 மில்லியனால் அல்லது 7 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளன. | கருத்து குறிப்பிடப்பட்டது. |
| (ii) 31 டிசம்பர் 2022 இல் அரசாங்கத்திடமிருந்து முதலீடுகள் மற்றும் பிற பெறத்தக்கவைகளின் மொத்தத் தொகை ரூபா.1,024,096 மில்லியனாக இருந்தது, அதன்படி, SOEs-க்கான மொத்த வெளிப்பாடு ரூபா.1,895,715 மில்லியன் அல்லது வங்கியின் மொத்த சொத்துக்களில் இருந்து 63.79 சதவீதம் ஆகும். | கருத்து குறிப்பிடப்பட்டது. |
| (iii) கடந்த 5 ஆண்டுகளில் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் (SOEs) கடன்கள் மற்றும் முன்பணங்களின் மொத்த | |

நிலுவைத் தொகை மற்றும் முதலீடுகள் மற்றும் அரசாங்கத்திடமிருந்து பிற வரவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| SOEக்கு சொந்தமான கடன்கள் மற்றும் முன்பணங்கள் (ரூபா. மில்லியன்) | 551,110 | 601,297 | 844,821 | 937,386 | 871,619 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது SOEகளின் நிலுவை அதிகரிப்பு (ரூபா. மில்லியன்) | 197,821 | 50,197 | 243,525 | 92,564 | (65,767) |
| **முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது SOEகளின் நிலுவை அதிகரிப்பு %** | **56.00** | **9.11** | **40.55** | **10.96** | **(7.02)** |
| மொத்த கடன்கள் மற்றும் முன்பணங்கள் (ரூபா. மில்லியன்) | 1,334,420 | 1,386,481 | 1,723,466 | 1,936,974 | 1,915,788 |
| **வங்கியின் மொத்த கடன்கள் மற்றும் முன்பணங்களில் SOEகளின் நிலுவை %** | **41.30** | **43.37** | **49.02** | **48.39** | **45.50** |
| வங்கியின் மொத்த சொத்துக்கள் (ரூபா. மில்லியன்) | 1,734,703 | 1,873,406 | 2,230,119 | 2,647,641 | 2,972,028 |
| மொத்த சொத்துக்களில் கடன் மற்றும் அட்வான்ஸ் SOEகளின் நிலுவை % | 31.77 | 32.10 | 37.88 | 35.40 | 29.33 |
| முதலீடு மற்றும் ஏனைய அரசிடமிருந்து பெறத்தக்கவை (ரூபா. மில்லியன்) | 328,158 | 419,217 | 435,343 | 672,155 | 1,024,096 |
| **SOEகளின் மொத்த சொத்து வெளிப்பாடு** | **879,257** | **1,020,514** | **1,280,164** | **1,609,540** | **1,895,715** |
| மொத்த சொத்துக்களில் SOE வெளிப்பாட்டின் % | 50.69 | 54.47 | 57.40 | 60.79 | 63.79 |
| **SOE களுக்கு செலுத்த வேண்டிய மொத்த (கடன் மற்றும் வைப்பு)** | **271,085** | **217,791** | **222,257** | **226,722** | **418,932** |

(iv) திறைசேரி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிரதிச் செயலாளரின் மொத்த நிலுவைத் தொகைகள் மற்றும் மூத்த குடிமக்கள் வைப்புத்தொகை, என்டபிரைசஸ் ஸ்ரீலங்கா ஆகியவற்றின் மீதான பெறவேண்டிய வட்டி மற்றும் அரசாங்க திறைசேரியிலிருந்து உள்நோக்கி அனுப்பப்படும் பணம் மீதான ஊக்குவிப்புத் தொகை DST - டிஎஸ்டியின் OD நிலுவையைக் குறைக்க வங்கிக்கு திறைசேரிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. வங்கி ஆரம்பத்தில் பண அடிப்படையில் கடனை திருப்பிச் செலுத்த வலியுறுத்தியது. எனினும், அதற்குப் பதிலாக அரசுப் பத்திரங்களை ஏற்கும்படி எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேற்கூறிய தீர்வுகளுக்குப் பதிலாக இந்த திறைசேரிப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டதால் இவை வங்கியின்

ரூபா.323,401.67 மில்லியன் பணமாகச் செலுத்துவதற்குப் பதிலாக 2022 ஆம் ஆண்டில் திறைசேரிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் செலுத்தப்பட்டது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | ரூபா. மில்லியன் |
|---|---|
| திறைசேரி துணை செயலாளர் | 309,999.96 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 3,364.76 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | 6,672.19 |
| மூத்த குடிமகன் | 2,195.98 |
| எண்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா | 233.41 |
| உள்நாட்டுத் தொழிலாளர்கள் பணம் அனுப்புவதற்கான ஊக்கத்தொகை | 935.37 |
| **மொத்தம்** | **323,401.67** |

1.5.2.7 சிறந்த 10 SOE கடன்கள் மற்றும் முன்பணங்கள்

31 டிசம்பர் 2022 இல் முதல் 10 SOE கடன்கள் ரூபா.811,307 மில்லியன் மூலதனம் ரூபா. 715,005 மில்லியன் மற்றும் வட்டி ரூபா.27,308 மில்லியன் இது SOE களுக்குச் சொந்தமான கடன்கள் மற்றும் முன்பணங்களின் மொத்த நிலுவையில் 82 சதவீதத்தை வழங்குகிறது. 2022 டிசம்பர் 31 இல் இலங்கை பெற்றோலியக்

முதலீட்டு தீர்மானம் அல்ல.

நீண்ட கால பத்திரங்களுக்கு சற்று கவர்ச்சிகரமான விகிதங்கள் இருந்தபோதிலும், அந்த நேரத்தில் அது எதிர்கொள்ளும் கடுமையான பணப்புழக்க நெருக்கடியின் காரணமாக வங்கி குறுகிய கால பத்திரங்களை (திறைசேரி பில்கள்) தேர்வு செய்தது. இந்த விருப்பம் இல்லாததால், வங்கி மிகக் குறைந்த முதிர்வு காலத்துடன் கூடிய திறைசேரிப் பத்திரங்களைக் கோரியது. இவற்றில் பெரும்பாலானவை அந்த நேரத்தில் முந்தைய திறைசேரிப் பத்திர ஏலத்தின் WAYR இல் வழங்கப்பட்டன, மேலும் இந்த yields சந்தை விகிதங்களை விட குறைவாக இருந்தது. எனவே, வங்கிக்கு ஏற்படக்கூடிய MTM இழப்புகளைத் தவிர்க்க, இவை ALCO இன் ஒப்புதலுடன் கடனீட்டுச் செலவின் (HTM) கீழ் பதிவு செய்யப்பட்டன.

RDA - 2022 இல் திறைசேரிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் வட்டி செலுத்தப்படும். இருப்பினும் ஜூன் 2023 இல் அனைத்து நிலுவைத் தொகைகளும் பொது திறைசேரியிலிருந்து நிதி பெறப்பட்டவுடன் தீர்க்கப்பட்டன.

NWSDB – நிலுவைத் தவணைகளில் ஒரு பகுதியை மீட்டெடுக்க ஆகஸ்ட் 2022 மற்றும் பெப்ரவரி 2023 இல் வழங்கப்பட்ட திறைசேரிப் பத்திரங்கள். 30.06.2023 வரையிலான அனைத்துத் தவணைகளையும் திரும்பப் பெறுவதற்காக, வாடிக்கையாளர் 26 செப்டம்பர் 2023 அன்று பணத்தை அனுப்பினார்.

மூத்த குடிமக்கள் - 2021 ஆம் ஆண்டின் Q2க்கான முழு மூத்த குடிமக்களுக்கான வட்டி மானியக் கோரிக்கை ரூபா.3,233,999,309.81

கருத்து குறிப்பிடப்பட்டது.

அரசாங்க திறைசேரியால் கையகப்படுத்தப்பட்ட CPCயின் கடன்களின் தற்போதைய நிலை பின்வருமாறு

அரசாங்கப் புத்தகங்களுக்குப் பொறுப்பை மாற்றுவதற்கான அனைத்து பேச்சுவார்த்தைகளிலும் இதுவரை பொது திறைசேரி தலையிட்டாலும், இப்போது IMF கடன் மறுசீரமைப்புக் குழுவால் செயல்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. செயல்முறையின் விதிமுறைகள் மற்றும்

கூட்டுத்தாபனத்திற்கு (CPC) 1,093 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மீதி அரசாங்க திறைசேரியால் கையகப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், மேலே எடுக்கப்பட்ட கடன்கள் வங்கியின் புத்தகங்களில் சரி செய்யப்படவில்லை மற்றும் அட்டுறு வட்டி அமைபில் ஏற்பாடு செய்யப்பட்டது. எனவே, பொது திறைசேரி மற்றும் CPC உடன் ஏற்பாட்டை வங்கி உறுதி செய்ய வேண்டும். 31 டிசம்பர் 2022 இன் முதல் பத்து SOE கடன்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நிபந்தனைகளை உறுதி செய்ய இரு வங்கிகளாலும் அவர்களுடன் இன்னும் விவாதங்கள் நடந்து வருகின்றன.

04 செப்டம்பர் 2023 திகதியிட்ட எங்கள் கடிதத்தின் மூலம் DST யிடம் இருந்து, ஏற்கனவே உள்ள கடன்களின் வட்டியைத் தீர்ப்பதற்கு, நிதி அமைச்சகத்திடம் ஏற்கனவே உள்ள நிதியை வட்டிக்கு ஒதுக்குமாறு செய்ய கோரியுள்ளோம்.

| நிறுவனம் | 31 டிசம்பர் 2022 நிலுவையில் உள்ளது ரூபா. மில்லியன் | பாதுகாப்பு | பாதுகாப்பு மதிப்பு |
|---|---|---|---|
| திறைசேரி பிரதி செயலாளர் | 60,323 | சுத்தமான | - |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 414,552 | திறைசேரி இழப்பீடு | அமெரிக்க டாலர் 1650 மில்லியன் |
| | | திறைசேரி உத்தரவாதம் | அமெரிக்க டாலர் 7.73 மில்லியன் |
| இலங்கை மின்சார சபை | 107,642 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா. 6,500 மில்லியன் |
| | | பெறத்தக்கவைக்கு மேல் அடமானம் | Rs. 38,800 மில்லியன் |
| | | சுத்தமான (ரூபா. 22,411 மில்லியன்) | - |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 71,697 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா. 35,000 மில்லியன் மில்லியன் அமெரிக்க டாலர் 44.72 மில்லியன் |
| | | திறைசேரி இழப்பீடு | ரூபா. 8,380.09 மில்லியன் |
| | | பொது திறைசேரியிலிருந்து உறுதிமொழி கடிதம் | ரூபா. 12,892.88 மில்லியன் |
| | | பண வைப்பு ஒதுக்கீடு | ரூபா. 3,688 மில்லியன் |
| ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் | 57,536 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா. 8,289.39 மில்லியன் அமெரிக்க டாலர் 5.38 மில்லியன் |
| | | பொது திறைசேரியிலிருந்து வசதிக் கடிதம் | ரூபா. 13,350 மில்லியன் அமெரிக்க டாலர் 100 மில்லியன் |
| சிலோன் பெர்டிலைசர் கம்பெனி லிமிடெட் | 25,666 | பொது திறைசேரியிலிருந்து வசதிக் கடிதம் | ரூபா. 28,827.98 மில்லியன் |
| | | நிலையான வைப்பு | ரூபா. 1,270.42 மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| இயக்குனர் ஓய்வூதியம் | 21,651 | திறைசேரி உத்தரவாதம் | MOU & அடிப்படை ஆவணங்கள் |
| கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர் லிமிடெட் | 16,054 | பொது திறைசேரியிலிருந்து ஆறுதல் கடிதம் | ரூபா. 18,637.65 மில்லியன் |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் | 15,793 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா. 3,961.03 மில்லியன்<br>Euro 7,624.77 மில்லியன் |
| | | பொது திறைசேரியிலிருந்து உறுதிமொழி கடிதம் | ரூபா. 11,680.86 மில்லியன் |
| சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் | 20,392 | திறைசேரி உத்தரவாதம் | அமெரிக்க டாலர் 71.91 மில்லியன் |
| மொத்தம் | 811,307 | | |

1.5.2.8 பிம்புத் பைனான்ஸ் பிஎல்சி

பிம்புத் பைனான்ஸ் என்பது 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தயா குழுமத்தைச் சேர்ந்த ஒரு சிறு நிதி நிறுவனமாகும் மற்றும் 2012 ஆம் ஆண்டு முதல் நுண் நிதிச் சேவைகளில் ஈடுபட்டுள்ளது. 2017-2019 காலப்பகுதியில் மேற்கூறிய நிறுவனத்திற்கு ரூபா.700 மில்லியன் வரை மூன்று கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 10 மார்ச் 2017, 17 டிசம்பர் 2018 மற்றும் 25 ஏப்ரல் 2019 திகதியிட்ட சலுகைக் கடிதம் சிறப்பு நிபந்தனை இல. 1ன் படி, ஒவ்வொரு அடுத்த காலாண்டின் முதல் வாரத்திலும் வங்கிக்கு கடன்கள் பெறத்தக்கவைகளின் பட்டியலை வழங்குவது அவசியம். எவ்வாறாயினும், சலுகைக் கடிதங்களின் சிறப்பு நிபந்தனையின்படி புதுப்பிக்கப்பட்ட கடன் பட்டியலைப் பெறுவதற்கு வங்கியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நிறுவனம் செயல்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் கோவிட்-19 பாதிப்பு. மார்ச் 2020 வரை, நிறுவனம் தங்கள் அனைத்து தவணைகளையும் தாமதமின்றி செலுத்தியது. எவ்வாறாயினும், கோவிட்-19 தாக்கத்திற்குப் பின்னர், வங்கியல்லாத நிதி நிறுவனமான, இந்த நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு CBSL ஆல் நிர்ணயித்தபடி தடைகால சலுகையை வழங்க வேண்டியிருந்தது, இது அவர்களின் அறவீட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது.
காலாண்டு நினைவூட்டல்கள் வாடிக்கையாளருக்கு மின்னஞ்சல்கள் மூலம் அனுப்பப்பட்டு, மார்ச் 31, 2021 க்கான கடன் பெறத்தக்கவைகளின் பட்டியலைப் பெற்றன. நிலுவைத் கடன்கள் மற்றும் தீர்வு செய்யப்பட்ட கடன்களுக்குப் பிறகு வசதிகள் NPக்கு மாற்றப்படும் வரை, இந்த கட்டத்தில்தான் வங்கி சமீபத்திய கடன் பட்டியலைப் பெறுகிறது.
எவ்வாறாயினும், மீட்கும் நடவடிக்கையின் போது, தயா குழுமத்தின் கார்ப்பரேட் உத்தரவாதத்தை வங்கி பெற முடிந்தது.

புத்தகக் கடன்களுக்கு கூடுதலாக, தயா குழுமத்தின் கார்ப்பரேட் உத்தரவாதத்தை வங்கி பிணையமாகப் பெற்றுள்ளது மற்றும் சபையின் நிர்வாகக் கடன் குழுவால் ஒப்புதல் பெறப்பட்டது.

(ii) மேற்கூறிய சலுகைக் கடிதங்களின் சிறப்பு நிபந்தனை இல.2 மற்றும் 3க்கு மாறாக, கடன் வாங்குபவர் மூன்று மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் பெறத்தக்க ஒப்பந்தத்தை ஒரு செயல்பாட்டு ஒப்பந்தத்துடன் மாற்ற வேண்டும் மற்றும் தீர்க்கப்பட்ட ஒப்பந்தங்கனுக்கு பதிலாக வேறு ஒப்பந்தங்கலை மாற்ற வேண்டும். இருப்பினும், அத்தகைய பின்தொடர்தல் வங்கியால் செய்யப்படவில்லை.

(iii) வங்கியின் கடன் கையேட்டின் அத்தியாயம் 5 இன் பிரிவு 6.2.8 இன் படி, புத்தகக் கடன்களுக்கு எதிராக வழங்கப்பட்ட கடன்களுக்கான அதிகபட்ச திருப்பிச் செலுத்தும் காலம் ஒரு வருடம் ஆகும். எவ்வாறாயினும், கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக, 3 முதல் 5 ஆண்டுகள் வரை திருப்பிச் செலுத்தும் காலம் வழங்கப்பட்டது.

(iv) சபையின் நிர்வாகக் கடன் குழு (BECC) குறிப்பு இல்.1133/2020 (மறுதிட்டமிடும் நேரத்தில்) இடர் முகாமைப் பிரிவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின்படி, இந்தக் கடன்களின் பாதுகாப்பு பலவீனமாகவும், அபாயகரமானதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு அதிகமாக உள்ளது. எவ்வாறாயினும், மேற்கூறியவற்றைப் புறக்கணித்து, பாதகமான சூழ்நிலைகளின் அடிப்படையில் கடன்கள் அங்கீகரிக்கப்பட்டன, அதன்பின் மூன்று கடன்களும் செயல்படாமல் இருந்தன. அவை மாற்றியமைக்கப்பட்டன மற்றும் அதே பாதுகாப்புடன் ஒரு மூலதன தடையும் வழங்கப்பட்டது.

மேற்கூறிய கடன்கள், கம்பனியின் மைக்ரோ பைனான்ஸ் கடன்களின் பெறத்தக்கவைகளுக்கு எதிராக வழங்கப்பட்டன, முதிர்வு காலம் 1 வருடத்திற்கும் மேலாகும், மேலும் இது BECC ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடன் வாங்கியவரின் மறுசீரமைப்பு மற்றும் கடன் வாங்கிய நிறுவனத்தின் தற்போதைய நிதி நிலைமையை உயர்த்தும் நோக்கத்துடன் கடன் பெறும் நிறுவனத்தின் வேண்டுகோளின்படி இரண்டாவது மறுசீரமைப்பு 31.05.2022 அன்று செய்யப்பட்டது. ஜி.ஐ. சுற்றறிக்கை இல. 734/2005 (17) இன் சுற்றறிக்கை வழிகாட்டுதல்களை சீரமைக்கும் தற்போதைய பத்திரங்களின் அடிப்படையில் இந்த மூன்று வசதிகளுக்கான மறுசீரமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த மறுசீரமைப்பு கட்டத்தில், கோவிட் 19 பாதிப்பால் நிறுவனம் எதிர்கொண்ட பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு வாடிக்கையாளரின் திருப்பிச் செலுத்துவதில் வங்கி முக்கியமாக கவனம் செலுத்தியது. தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் போது, மறுசீரமைக்கப்படவிருக்கும் கடன் வசதிகளைப் பத்திரப்படுத்துவதற்கு அசையாச் சொத்து/ வேறு எந்தச் சொத்தும் வெளிப்படுத்தப்படவில்லை. தற்போதுள்ள பத்திரங்களைச் சார்ந்து இருப்பதைத் தவிர வங்கிக்கு வேறு மாற்று இல்லை.

கடன் பிரிவு செய்த கடன் அபாய மதிப்பீட்டின் படி, நிறுவனத்தின் கடன் அபாய மதிப்பீட்டின் ”பிபி” இலிருந்து ”சி” ஆகக் குறைக்கப்பட்டுள்ளது, இது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் வாங்குபவரின் நிதி நிலையை மறுசீரமைக்கும் நோக்கத்துடன் உள் ஒப்புதலுக்கு உட்பட்டு இந்த மறு திட்டமிடல் ஏற்பாடு செய்யப்பட்டது. கடன் வாங்கும் நிறுவனம் மாதாந்திர தவணை வசதிகளை குறைக்குமாறு

(v) இந்த வாடிக்கையாளரின் கடன் அபாய மதிப்பீட்டின் புள்ளிவிவரங்கள் கடன் கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் அபாய புள்ளிவிவரங்களின்படி 2019 முதல் 2022 வரையிலான காலக்கட்டத்தில் இருந்து ‘டீடீ’ இலிருந்து ‘ஊ’ க்கு மோசமடைந்துள்ளது..

(vi) ஒப்புக்கொண்டபடி வட்டியை செலுத்தாததால், இந்த கடன்கள் 06 செப்டம்பர் 2022 அன்று செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டன. கடன் வகையின் அடிப்படையில், கடன் மீட்பு கையேட்டின்படி இந்த கடன்கள் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்படலாம். எவ்வாறாயினும், வங்கியானது கடன்களின் காலத்தை 9 முதல் 11 ஆண்டுகள் வரை நீட்டித்துள்ளது. வலுவான பத்திரங்களைப் பெறாதது, சரியான திருப்பிச் செலுத்தும் திட்டம் கிடைக்காமை மற்றும் பலவீனமான கடன் மதிப்பீடு ஆகியவை இந்தக் கடன்களுக்கான முக்கிய பலவீனங்களாகக் காணப்பட்டன. மொத்த நிலுவைத் தொகை ரூபா. 422.61 மில்லியன் 2022 செப்டம்பர் 06, நிலவரப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது, இதில் மூலதன ரூபா.417.92 மில்லியன் அடங்கும்.

(vii) கடன் நிலுவைகள் ஏதும் இல்லை என்றாலும், 05 வாடிக்கையாளர் அடையாள இலக்கம் (CIF) அதே வாடிக்கையாளருக்குப் பின்வரும் அமைப்பில் காணப்பட்டன.
450012095,1740003288,
2240046224,680023200

(viii) மேற்கூறிய நிறுவனத்தின் உரிமம் 01 செப்டம்பர் 2023 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது, அதன்படி, மேற்கண்ட கடன்கள் திரும்பப் பெறப்படுவது சந்தேகத்திற்குரியது.

கோரிக்கை விடுத்திருந்தது. எனவே, மாதாந்திர தவணையை சமர்ப்பிக்க மீண்டும் 6 ஆண்டுகள் வரை சலுகை காலம் நீட்டிக்கப்பட்டது. இது G I சுற்றறிக்கை இல். 734/2005 (17) இன் வழிகாட்டுதல்களுடன் சீரமைக்கப்பட்டது. வங்கிக்கு ரூபா.51.93 மில்லியன் மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டுமாக மறுசீரமைப்பு ஏற்பாட்டிற்குப் பிறகு செலுத்தப்பட்டது. கடன் வசதிகள் NP பிரிவில் இருந்தாலும் கடன் பெறும் நிறுவனத்திடம் இருந்து பணம் பெறுவதே மறு திட்டமிடலின் முக்கிய நோக்கமாகும்.

31.12.2023க்கு முன் இந்த CIFகள் அனைத்தையும் இயல்பாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கடன் வசதிகளின் மீட்சியானது தயா குரூப் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் கார்ப்பரேட் உத்தரவாதத்தைப் பொறுத்தது. கடன் வாங்கியவர் மற்றும் கார்ப்பரேட் உத்தரவாததாரருக்கு எதிராக சட்டப்பூர்வ வழக்கு பதிவு செய்யப்பட்டது. நட்டமடைந்த நிறுவனத்தின் புத்தகக் கடன்கள் தொடர்பாக அடமானப் பத்திரத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதால், வங்கி எந்த அடமானப் பத்திர நடவடிக்கையையும் தாக்கல் செய்யவில்லை. கூறப்பட்ட மறு திட்டமிடல் முழுவதும், வங்கி மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்கும் கணிசமான தொகையை மீட்டெடுக்க முடியும். பண மீட்பு நடவடிக்கை மற்றும் வாடிக்கையாளருடன் பேச்சுவார்த்தை மூலம் மீதி மீட்கப்படும்.

1.5.2.9 ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கடன் வழங்கப்பட்டது

ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்பது தயா குரூப் நிறுவனத்தின் துணை நிறுவனமாகும், இது தயா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற பெயரில் 2007 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு மீண்டும் ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற பெயரில் கட்டுமானத் துறையில் ஈடுபட்டு வந்தது. 31 டிசம்பர் 2021 இல் கடன் இலாகாவில் உள்ள விவரங்களின்படி, ரூபா.581.63 மில்லியன் (மூலதனம் ரூபா.518.12 மில்லியன், திரண்ட வட்டி ரூபா.57.42 மில்லியன், அபராத வட்டி மற்றும் தாமதக் கட்டணங்கள் ரூபா.6.019 மில்லியன்) என மொத்தம் 07 கடன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வாடிக்கையாளரிடமிருந்து பெறத்தக்கவை. பின்வரும் அவதானிப்புக்கள் கண்டறியப்பட்டது.

(i) இந்த கடன்கள் விதிவிலக்கான நிபந்தனைகளின் பேரில் நிர்வாகக் கடன் குழுவின் ஒப்புதலுடன் வழங்கப்பட்டன மற்றும் பல மறுசீரமைப்புகளுக்குப் பிறகு நிர்வாகக் கடன் குழுவால் பல தள்ளுபடிகள் அங்கீகரிக்கப்பட்டது. கணக்காய்வுக்கு அனுப்பப்பட்ட விவரங்களின்படி, வாடிக்கையாளருக்கு ரூபா.33.13 மில்லியன் தள்ளுபடி வழங்கப்பட்டது.

BP 962/2021 இன் படி Olympus கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் குறிப்பிடப்பட்ட திரண்ட வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான முன்மொழிவு வங்கியின் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

அடிப்படையில், NP முன்பணங்களை மாற்றியமைப்பதற்காக வெளியிடப்பட்ட பொது அறிவுறுத்தல் சுற்றறிக்கை இல. 734/2005(17), விதிவிலக்கான சூழ்நிலைகளில் திரண்ட வட்டியில் 30% மாற்றவும் முன்மொழிந்துள்ளது.

பின்வரும் காரணிகளைக் கருத்தில் கொண்டு நிறுவனம் செயல்படாத வாடிக்கையாளர் என வகைப்படுத்தப்பட்டது.

1.5.2.10 டபிள்யூ.எம்.மெண்டிஸ் அண்ட் கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன்கள்

2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று, மேற்படி வாடிக்கையாளருக்கு வங்கியினால் ரூபா.3,063 மில்லியன் மொத்தக் கடன் மூலதனம் வழங்கப்பட்டுள்ளது.

(i) வங்கியின் கடன் நடைமுறைக் கையேட்டின் தலைப்பு 5, பந்தி 12 இன் படி, எந்தவொரு கடனையும் வழங்குவதற்கு முன், NPL கடன்கள் கிடைக்காததா என்பதை உறுதிசெய்ய, வங்கியின் பொறுப்புப் பதிவுகள் சரிபார்க்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்கூறியவற்றிற்கு மாறாக, மேற்படி வாடிக்கையாளருக்கு வங்கியினால் மொத்தமாக ரூபா.378 மில்லியன் பெறுமதியான 3 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

- SCB நிதியில் ஏற்கனவே கட்டுமானம் தொடங்கப்பட்ட ENA ஆலையின் இரண்டாம் நிலை அடமானத்தை செயல்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் பத்திரங்களை வலுப்படுத்துதல் மற்றும் அதன் சந்தை மதிப்பு, நேரத்துடன் சாத்தியமான மதிப்பு அதிகரிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளுதல்.
- கடன் நடைமுறை கையேடு பிரிவு 02 (பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் அதிகாரம்) அட்டவணை 04 இன் படி தற்போதுள்ள குறுகிய கால வசதிகளை சுழற்றுவது - எதிர்கால வசதிகளை மீட்டெடுப்பதை மேம்படுத்த 120% மீட்பு அடிப்படையில் வர்த்தக நிதி பரிவர்த்தனைகள் தொடர்பாக CBD/OBU அதிகாரிகளுக்கு அதிகாரமளித்தல்.
- மீட்சியின் அதிக சதவீதத்தில் குறுகிய கால வசதிகளை சுழற்றுவதன் மூலம் செயல்படாத இலாகாவை குறைக்கும் நோக்கத்துடன்.

(ii) 2021 ஜூன் 28, திகதியிட்ட சபையின் நிர்வாக கடன் குழுவின் (BECC) குறிப்பு இல.708/2021 இன் படி, ரூபா.3,062.7 மில்லியன் நிலுவையில் உள்ள மூலதனம் 7 ஆண்டுகள் வரை 9.75 சதவீத வட்டியில் 4 கடன்கள் மறுசீரமைக்கப்பட்டது (18 மாதங்கள் மூலதனத் திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைக் காலம்) மற்றும் நிலுவைத் தொகை வட்டி மற்றும் அபராத வட்டி ரூபா.806.9 மில்லியன் 3 ஆண்டுகள் வரை 9.75 சதவீத வட்டியில் 4 கடன்கள் மறுசீரமைக்கப்பட்டது.

(அ) 28 ஜூன் 2021 திகதியிட்ட BECC குறிப்பு இல.708/2021 இன் பந்தி 9 இன் படி, "வேறுபாடு மற்றும் பின்னர் பதிவழித்தல்" என மேலதிக வசதிகள் மீதான ரூபா.400 மில்லியன் வட்டியை நீக்கி கடன்கள் மறுசீரமைக்கப்பட்டது.

(ஆ) மேலே உள்ள BECC குறிப்பின் பிரிவு 11.4 இன் படி 2 சபை இயக்குநர்களின் தனிப்பட்ட உத்தரவாதங்களைப் பெறுவது பரிந்துரைக்கப்பட்டது. இதன்படி, ரூபா 1,632.2 மில்லியன் பெறுமதியான 7 கடன்களுக்கு மட்டுமே பணிப்பாளர்களின் தனிப்பட்ட உத்தரவாதங்களும் உறுதிமொழித் தாள்களும் பெறப்பட்டுள்ளன.
எவ்வாறாயினும், உத்தரவாதம் அளிக்கப்பட்ட பணிப்பாளர்கள் தலா ரூபா.100 மில்லியன் பங்குகளின் மதிப்பை படிவ இல.149 மூலம் மட்டுமே சமர்ப்பித்துள்ளனர் மற்றும் உறுதிப்படுத்தும் ஆதாரங்காள் கூட வங்கியால் பெறப்படவில்லை.

செயல்படக்கூடிய மீட்புத் திட்டத்திற்குச் செல்ல வங்கிக்குத் தேவைப்படும் செயல்பாடுகளைத் தொடர நிறுவனத்திற்கு ஆதரவளிக்க.

மீட்பு முயற்சிகளின் கண்ணோட்டத்தில் கடன் ஒப்பந்தத்தை வலுப்படுத்த மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.
BECC/708/2021 இன் படி, OD வசதிகளுக்காக ஆண்டுக்கு 24 சதவீதம் திரண்ட வட்டி ரூபா.1,051 மில்லியனில் ரூபா.400 மில்லியன் சலுகை வழங்கப்பட்டது. 19 ஜூலை 2021 திகதியிட்ட சலுகைக் கடிதத்தில் இது இணைக்கப்பட்டுள்ளது, திருப்பிச் செலுத்துதல் திருப்திகரமாக இருந்தால் மட்டுமே இந்தச் சலுகை அனுமதிக்கப்படும்.
மொறகொல்லவில் உள்ள முதன்மை அடமானம் மற்றும் தற்போது இயங்கி வரும் கல்குடா ஆலை மீதான இரண்டாம் நிலை அடமானம் ஆகியவற்றிற்கு மேலதிகமாக எட்டு (08) மறுசீரமைப்புக் கடன்களுக்கும் தனிப்பட்ட உத்தரவாதமும் உறுதிமொழிக் குறிப்புகளும் எடுக்கப்பட்டுள்ளன.
மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட மூலதனமாக்கப்பட்ட திரண்ட வட்டி கடன்கள் உட்பட மொத்த மூலதன நிலுவைத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட உத்தரவாதர்களின் சொத்து அறிவிப்பு படிவங்களில் உத்தரவாதர்களின் சொத்துதின் அடிப்படை தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும், கல்குடா எத்தனால் உற்பத்தி ஆலையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக நிறுவனத்தின் சொத்துதின் அடிப்படை கணிசமாக அதிகரித்து வருகிறது.

(இ) ரூபா.3,869.2 மில்லியன் மூலதன நிலுவைத் தொகை மற்றும் ரூபா.507.6 மில்லியன் வட்டியை உள்ளடக்கிய மொத்த நிலுவைத் தொகையான ரூபா.4,376.86 மில்லியன்கள் மேலே உள்ள வாடிக்கையாளரின் கீழ் 2022 டிசம்பர் 31, இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.
எவ்வாறாயினும், கிடைக்கக்கூடிய பத்திரங்களின் மதிப்பு ரூபா.1,912.8 மில்லியனாக (04 அக்டோபர் 2022 நிலவரப்படி) காணப்பட்டது, இது கடன் மதிப்பில் 43.7 சதவீதத்தை மீட்டெடுக்க மட்டுமே போதுமானது.

1.5.2.11 பிசி ஹவுஸ் பிஎல்சிக்கு கடன்கள் வழங்கப்பட்டன

மேற்கூறிய வாடிக்கையாளருக்கு ரூபா.180 மில்லியன் டிரஸ்ட் ரசீது (டிஆர்) துணை வரம்புடன் ரூபா.200 மில்லியன் இறக்குமதி வசதி வழங்கப்பட்டது மற்றும் நிறுவனத்துடன் தொடர்புடைய ஆபத்து காரணமாக அது ரூபா. 121 மில்லியன். இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட வசதி 30 ஆகஸ்ட் 2009 அன்று காலாவதியானது மற்றும் நிலுவைத் தொகைகள் செயல்படாத வகைக்கு மாற்றப்பட்டது. அதன்படி, வங்கி செயல்படாத TR கடன்களை மறுபரிசீலனை செய்துள்ளது மற்றும் 24 டிசம்பர் 2009 அன்று போர்டு எக்ஸிகியூட்டிவ் கிரெடிட் கமிட்டி (BECC) குறிப்பு இல. 678/2009 மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டது. மறு திட்டமிடலின் போது, வங்கி கட்டாய விற்பனை மதிப்பு (குளுஏ) கொண்ட இரண்டு அசையா சொத்துகளின் அடமானத்தின் மீது ரூபா.15 மில்லியன். ரூபா.15.5 மில்லியன். தற்போதுள்ள TR வசதி வரம்பு புதுப்பிக்கப்பட்டு ஆக குறைக்கப்பட்டது. ரூபா.106 மில்லியன் (எல்சியின் துணை வரம்பு ரூபா. 30 மில்லியன்) மற்றொரு வருட காலத்திற்கு. டிஆர் வசதி இயக்குனர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்களுக்கு எதிராக ரூபா.106 மில்லியன் பாதுகாக்கப்பட்டது மற்றும் மட்டக்குளி, யூனிட்டி பிளாசா ரூ மெஜஸ்டிக் சிட்டி ஆகியவற்றில் உள்ள பங்குகளை அடமானம் வைத்து, கட்டாய விற்பனை மதிப்பு (FSV) ரூபா.210 மில்லியன். BECC குறிப்பு இல.678/2009

வங்கிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது இந்த தீர்ப்புக்கு எதிராகவும், தீர்ப்புக்கு எதிராகவும் நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது மற்றும் மேல்முறையீடு இன்னும் பட்டியலிடப்படவில்லை.

வெற்றிகரமான ஏலதாரர்கள் இல்லாததால், அடமானம் வைக்கப்பட்ட இரண்டு சொத்துக்களை 26 ஜனவரி 2018 அன்று வங்கி செயல்படுத்தியது. சொத்துக்கள் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன. அதே ஆண்டில் அந்த சொத்துக்கள் ரூபா. 47.75 மில்லியன் சொத்துக்களை விலை மனுகோறி கடனின் ஒரு பகுதியை மீட்டெடுத்தார்.
31 ஆகஸ்ட் 2023 இன் படி நிலுவையில் உள்ளது மூலதனம் ரூபா.63.88 மில்லியன்/சாதாரண வட்டி ரூபா. 110.71 மில்லியன். /தண்டனை ரூபா. 32.01 மில்லியன்.

இன் படி, நிறுவனத்திற்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கையைத் தாக்கல் செய்வதைத் தவிர வேறு வழியில்லாததால், மறு அட்டவணை முன்மொழிவு பரிந்துரைக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன,

(i) இயக்குநர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்கள் மற்றும் கடன் ஆவணங்களுக்கு எதிராக HC/CIVIL/321/2013/MR தொடர்பான வழக்கு வங்கியால் தாக்கல் செய்யப்பட்டது. வங்கிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டாலும், அந்த தீர்ப்பை எதிர்த்து அந்நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

(ii) 17 செப்டம்பர் 2012 திகதியிட்ட குழு மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டு அறிக்கையின்படி, மட்டக்குளி மற்றும் யூனிட்டி பிளாசாவில் உள்ள பங்குகளின் கட்டாய விற்பனை மதிப்பு ரூபா.149 மில்லியனாக இருந்தது. அந்த பங்குகளின் மீது அடமானம் வைக்கப்படுவதற்கு எதிராக TR வசதிகள் பாதுகாக்கப்பட்டாலும், செலுத்தாத கடனை மீட்டெடுப்பதற்கு எதிராக எந்தப் பங்கையும் வங்கி பெறத் தவறிவிட்டது. எனவே, TR வசதிகள் 30 செப்டம்பர் 2022 இல் நிலுவையில் இருந்தன, மேலும் ரூபா.196.3 மில்லியன் மொத்த நிலுவைத் தொகை வங்கிக்கு நஷ்டமாக இருக்கலாம்.

(iii) TR கடன்கள் இயக்குநர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டன. கடன் நடைமுறை கையேட்டின் பிரிவு 5.9.4 இன் படி, ஒவ்வொரு உத்தரவாததாரருக்கும் சொந்தமான சொத்துகளின் பட்டியலைப் பெறுவது அவசியம், மேலும் அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் கொண்டவர்களா என்பதை உறுதிசெய்து, முன் அனுமதியின்றி அறிவிக்கப்பட்ட சொத்துக்களை அகற்றக்கூடாது என்ற எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தைப் பெற வேண்டும். வங்கியின். இருப்பினும், தணிக்கைக்கு அத்தகைய ஆவணங்கள் எதுவும் கிடைக்கவில்லை

கருத்து குறிப்பிடப்பட்டது

சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை கடைபிடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

### 1.6. வரி விதிகளுக்கு இணங்காதது

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1. 2022 டிசம்பர் 31, முதல் டெபிட் வரி ரத்து செய்யப்பட்டாலும், 31 டிசம்பர் 2022 நிலவரப்படி வங்கியின் விரிவான நிதி நிலைக் கூற்றில் ரூபா.8,537,114 வரி செலுத்த வேண்டிய மீதி இருந்தது. | 2023 மார்ச் 15, அன்று கமிஷனர் ஜெனரலுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது, 2019 இல் ரத்து செய்யப்பட்ட பிறகு டெபிட் வரி வசூல் குறித்த ஆலோசனையைக் கோரியது. | வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| 1.6.2. முற்பண தனிநபர் வருமான வரி (APIT) குறைவாக செலுத்துதல்<br>முற்பண தனிநபர் வருமான வரி வங்கியால் மாதாந்திர அடிப்படையில் செலுத்தப்பட்டது. செலுத்த வேண்டிய தொகையைப் பெற, ஏற்கனவே செலுத்தப்பட்ட APIT தொகையானது ஒரு குறிப்பிட்ட மாத APIT கணக்கீட்டிலிருந்து கழிக்கப்படுகிறது. ஏப்ரல் முதல் ஆகஸ்ட் 2022 வரை APIT செலுத்திய ரூபா. 17,853,140. தொகையை வங்கி செப்டம்பர் 2022 க்கான APITஐக் கணக்கிடும் போது குறிப்பிட்டிருந்தது. இருப்பினும், ஆகஸ்ட் மாதக் கணக்கீட்டின்படி, ஆகஸ்ட் 2022 இன் இறுதியில் APIT செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா.11,902,093 ஆகும். இதன் காரணமாக, முற்பண தனிநபர் வருமான வரிச் செலவு மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா.6,433,878 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது (வரி மீதான வரி உட்பட). | ஒப்புதல் செயல்முறைக்குப் பிறகு, பற்றாக்குறை விரைவில் செலுத்தப்படும். ஏதேனும் சந்தேகத்தைத் தவிர்க்க, இது மீண்டும் மீண்டும் செய்யப்படாத ஒரு பிழையாகும். | |
| 1.6.3. 2014 ஜூன் 23 அன்று வெளியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி இல. 1868/10 - நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி.<br>23 ஜூன் 2014 அன்று உள்நாட்டு வருவாய் ஆணையாளர் நாயகம் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரியுடன் தொடர்புடைய அதிவிசேட வர்த்தமானி இல. 1868/10 இன் அட்டவணை 02 (இ) இன் படி, பணியாளருக்கு செலுத்த வேண்டிய மொத்தக் கொடுப்பனவுகள் பணமாக மற்றும் பணம் அல்லாமல் பணியாளருக்கு செலுத்த வேண்டியவையும் சேர்க்கப்பட வேண்டும். எனவே, பணமற்ற வடிவத்திலும் பணியாளருக்கு செலுத்துவதையும் நிறுவனம் கருத்தில் கொள்ள | முன்னிலைப்படுத்தப்பட்ட வேறுபாடுகளுக்கான காரணங்கள் பின்வருமாறு;<br>1. தொழில்முறை அமைப்புகளுக்கான வருடாந்திர சந்தா செலுத்துதல், மற்றும், CBSL க்கு வங்கியின் உரிமம் செலுத்துதல் மற்றும் CEFT க்கு வங்கியின் சந்தாக்களாக ரூபா. 38 மில்லியன் மற்றும் ரூபா. 6.5 மில்லியன், ஐஆர்டி உடனான FS VAT தீர்வுச் செயல்பாட்டில் இறுதிப் பகுதி ஊதியமாக கருதப்படும்.<br>2. வங்கி பாதுகாப்பு அதிகாரிகள் போன்ற சீருடைகளுக்கு மெசஞ்சர்ஸ் யூனி.ஃபார்ம் கணக்கில் வரவு | |

வேண்டும். எவ்வாறாயினும், நிதிச் சேவையின் மீதான VATயைக் கணக்கிடுவதில் பணமில்லாப் பலன்களை ஊதியமாக வங்கி கருதவில்லை. எனவே செலவுகள் மற்றும் பொறுப்பு ரூபா.39,603,848 ஆல் குறைத்துக் காணப்பட்டது.

1.6.4. கடிதம் இல: MF/FP/13/CM/2018/82 திகதி 20 ஜூன் 2018, திறைசேரியின் துணைச் செயலாளரால் வழங்கப்பட்டது – முற்பண தனிப்பட்ட வருமான வரி மீதான பணமில்லா நன்மை

திறைசேரியின் துணைச் செயலாளரால் வழங்கப்பட்ட 20 ஜூன் 2018 திகதியிட்ட கடித இல. MF/FP/13/CM/2018/82 இன் பிரிவு 4 (2) இன் படி, சலுகைக் கடன் விகிதங்கள் மூலம் பெறப்பட்ட பணமில்லாப் பலன்கள் பரிசீலிக்கப்படும். சலுகைக் கடன் விகிதத்திற்கும் சந்தைக் கடன் விகிதத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தில் 50 சதவீதத்தைக் கணக்கிட்டுப் பணியாளர் சம்பாதிப்பதாகக் கருதப்படும். 2022 ஆம் ஆண்டிற்கான அதன் ஊழியர்களின் முற்பண தனிநபர் வருமான வரியை மதிப்பிடும்போது, சலுகைக் கடன் வட்டியின் மீதான பணமில்லா பலனை நிறுவனம் கருத்தில் கொள்ளவில்லை.

1.6.5. உள்நாட்டு வருவாய் சுற்றறிக்கை இல. SEC/2020/02 திகதி 18 டிசம்பர் 2020

18 டிசம்பர் 2020 திகதியிட்ட உள்நாட்டு வருவாய் சுற்றறிக்கை இல. SEC/2020/02 இன் பிரிவு 2 இன் படி, தொழில் வழங்குநர் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு பெறுமதி ரூபா.5,000,000 ஐத் தாண்டும் போது, அதில்இருந்து 12 சதவீதத்தை பிடித்து வைத்திருக்க வைக்கப்பட்டுள்ளது, இந்த சீருடைகள் ஊழியர்களின் தனிப்பட்ட நன்மையாக இருக்க முடியாது, மேலும் அவர்கள் அதை வங்கி வளாகத்தில் மட்டுமே அணிய வேண்டும்.

3. வாழ்வாதாரம் & தங்குமிடம் மற்றும் பணியாளர் பயணம் ஆகியவை வங்கியின் உத்தியோகபூர்வ நோக்கத்திற்காக செலவினங்களை திருப்பிச் செலுத்துவதாகும். எ.கா. உள்ளக கணக்காய்வாளர்களால் கிளை வருகைகளுக்கான செலவினங்களை திருப்பிச் செலுத்துதல்.
4. சில கிளைகள் செயல்படாத கடன் மீட்பு நோக்கங்களுக்காக அவுட்சோர்ஸ் பணியாளர்களைப் பயன்படுத்தியது மற்றும் செலுத்தாத கடனை மீட்டெடுப்பதற்கான ஊக்கத்தொகை மூலம் செலுத்தப்பட்டது.
5. C/A மருத்துவக் கோரிக்கைகள் செலுத்தப்பட்ட-”c” வகை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மருத்துவப் பணம் செலுத்தப் பயன்படுகிறது.

YA 2018/2019 க்கான சலுகைக் கடன் விகிதத்தை 9.08% என CGIR அறிவித்தது. YA 2022/2023 க்கான சந்தைக் கடன் விகிதத்திற்கும் சலுகைக் கடன் விகிதத்திற்கும் இடையே உள்ள 50 % வித்தியாசத்தின் அடிப்படையில், சலுகைக் கடன் விகிதத்தின் பணமில்லாப் பலனைக் கணக்கிடும் நோக்கத்திற்காக விகிதத்தை அடையாளம் காண முடியாது.

